# SAINT VANATHUSINNAPPAR WORSHIP AND SOCIAL COHESION: A STUDY BASED ON GLYNLINE TEA ESTATE

**R. Alaguraja**[1]

Correspondence: raja24krishna@gmail.com

## ABSTRACT

Religion is a universal social institution. Religion is a unified system of beliefs and practices relative to sacred things that is to say things set a part and forbidden – beliefs and practice (Dhurheim,1965). Every Religion has different rituals and worship systems in the world. In that respect Saint Hermits' worship is an important in Christian of catholic. And the first hermits Saint Vanaththu Sinnapar worship is very famous in upcountry estate sector in Sri Lanka wild range. The research area Glyneline tea estate. It is a multi-religion society the place where Hindhus, Christians, Buddhist and Islamic people are living. All the different religion peoples contributed their own sable to the Saint Vanaththu Sinnappar worship and Islam people also helped for the worship activities in this estate. The qualitative research method is used in this study. The primary qualitative data have been collected by observation, in-depth interview and case studies. Secondary data gathered from relevant books, magazines and internet sources. The thematic analysis technique is applied for data analysis. Saint Vanaththu Sinnappar's temple was found among the tea growing hills for the purpose of getting benefits in their works and protection. Estate people do their special worship on 01st of May. They put natural awning and prepare meals for prayer and after the prayer, all people share and eat meal without any religions different at the particular place. People perform their religious activities without the interference of religious leaders like Hindhu's folk worship and it is great a way of Common religion. The saint Vanaththu Sinnapar worship gives more valuable functions to this estate community such as it develops Social Solidarity and Peaceful Society, Moral community, Keep social control, give emotional support to lamp estate labors. This worship and rituals expert interrelated Relationship among religions in that estate.

**Keywords:** Saint Vanaththu Sinnapar, social cohesion, social solidarity, tea estate, worship

## மலையகத்தின் புனிதவனத்து சின்னப்பர் வழிபாட்டுமுறையும் சமூக இணக்கப்பாடும்.: ஸ்டயர் தேயிலை தோட்டத்தினை அடிப்படையாக கொண்ட சமூகவியல் ஆய்வு

**இராமையா அழகுராஜா,**
4ம் வருடம், சமூகவியல் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
Email id- raja24krishna@gmail.com.

**ஆய்வுச்சுருக்கம்.**

சமயம் என்பது உலகலாவிய நிறுவனமாக சமூகத்தில் முக்கியத்துவம் உடையதாக காணப்படுகின்றது. சமயம் எனும் போது புனிதமான ஒன்றினைபற்றிய நம்பிக்கைகளும் செயன்முறைகளும் அடங்கிய தொகுதி என சமூகவியலாளரான எமில்துர்கைம் கூறுகின்றார். ஓவ்வொரு சமயங்களும் பல்வேறுபட்ட சடங்கு வழிபாட்டு முறைகளின் வழி சமூகத்தில் ஒருமைப்பாடு கூட்டுணர்வினை ஏற்படுத்துவதாக அமைகின்றது. அந்த வகையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடையே புனிதர்கள் வழிபாடு முக்கியத்துவம் உடையதாக உள்ளது. முதலாம் புனிதரான வனத்து சின்னப்பர் வழிபாடு மலையக கத்தோலிக்கர்களிடம் பரந்து காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசமான ஸ்டயர் தேயிலை தோட்டத்தில் கிறிஸ்தவ, இந்து, பௌத்த, இஸ்லாம் என பல்மத மக்கள் வாழும் இடமாக காணப்படும் அதேவேளையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுடன் இணைந்து இந்து, பௌத்த மதத்தவரும் இப் புனிதரை வழிபடும் அதேவேளை இஸ்லாமியர் இவ் வழிபாட்டிற்கான உதவிகளை வழங்குவதனூடாக சர்வமத அனுசரனையுடன் இவ் வழிபாடு இடம்பெறுகின்றது. இவ் ஆய்வானது பண்புசார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுக் கருவிகளாக ஆழமான நேர்காணல், விடய ஆய்வு, பங்குபற்றும் அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகளின் ஊடாக முதலாம் நிலைத் தரவுகளும், கிறிஸ்தவ மதநூல்கள், கிறிஸ்தவ சஞ்சிகைகள் ஊடாக இரண்டாம் நிலைத்தரவுகளும் பெற்று தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டது. இப் புனிதர்க்கான ஆலயம் தேயிலை மலைகளிற்கிடையில் மிக எளிமையான வகையில் அமைந்துள்ளது. தோட்ட தொழிலாளிகளான இம்மக்கள் தொழில் நலன்வேண்டியும் பாதுகாப்பு வேண்டியும் தொழிலாளர் தினமான மே 1ம் திகதி தொழிலாளர்கள் மதபேதமின்றி கிராமிய வழிபாட்டு முறைகளினை ஒத்தவகையில் பந்தலிட்டு,படையல் செய்து வழிபடுகின்றனர். தங்கள்

[1] Department of Sociology, University of Jaffna, Sri Lanka.

பண்பாடுகளிற்கேற்றவகையில் இவ்வழிபாடமைவதால் இவ் வழிபாடு நிலைத்து நிற்கின்றது. இவ் வழிபாட்டிற்கு தேவையான பொருட்கள் மக்கள் தங்களால் இயன்ற அளவு வழங்குகின்றனர். விசேட நேத்திக்கடன் உடையவர்கள் உயிர்கோழியை வழங்குகின்றனர் இவற்றை ஆலய முன்றலில் சமைத்து எல்லோரும் பகிர்ந்துண்ணுகின்றனர். மக்கள் புனிதவனத்து சின்னப்பர் மீது ஆழமான நம்பிக்கை வைத்துள்ளனர். தேவாலய மதகுருமார்களின் தலையிடின்றி பாமர மக்களினால் இவ் வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. அந்தவகையில் வழிபாட்டில் மதபேதமின்றி மக்கள் பொதுவான சமயம் என்ற வகையில் ஒன்றினைகின்றனர்,இம் மக்களின் கூட்டுமன உணர்வினை ஏற்படுத்தி சமூக உறுதிப்பாட்டின் ஊடாக சமாதானமான சமூகத்தினை உருவாக்கப்படுகின்றது. மற்றும் மக்களிடம் மன எழுச்சிசார் இதமான நிலை, சமூக உறுதிப்பாடு, சமூக கட்டுப்பாடும், சமூக இசைவு, நாளாந்த வாழ்வுக்கு வழிகாட்டுதல் போன்ற பெறுமதிகளை தருவதாக வனத்து சின்னப்பர் வழிபாடானது மலையகத்தில் அமைந்துள்ளது.

**திறவுசொற்கள்** : புனிதவனத்து சின்னப்பர், வழிபாடு, சமூக இணக்கப்பாடு , தேயிலை தோட்டம், சமூக உறுதிப்பாடு.

## 1. ஆய்வு அறிமுகம்

சமயம் என்பது சமூகத்தில் முக்கியமான இடத்தில் காணப்படும் உலகளாவிய சமூக நிறுவனமாகக் காணப்படுகின்றது. சமயம் என்பது தொடர்பில் சமூகவியலாளரான எமில் துர்கெயிம்,(1961). சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய தொகுதி என வரையறை செய்கின்றார். அக்கருத்தை மேலும் விரிவுப்படுத்திய ஒடியா என்பவர் பகுத்தறிவுக்கு உட்படாததும் செயலறிவிற்கு ஓர் உலகத்துடன் தொடர்பு கொள்ள மக்கள் ஏற்படுத்திக் கொண்ட முறையே சமயம் என்கிறார்.

சமயங்கள் மனித ஆற்றலுக்கு அப்பாற்ப்பட்ட ஆற்றல் ஒன்றுள்ளது என்ற தொன்மை மக்களின் நம்பிக்கையே சமயம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது. அம்மக்களின் நம்பிக்கைகள் படிமலர்ச்சி பெற்றமையால் பல சமயப் பிரிவுகள் வளர்ச்சி பெற்றது. மக்களிடம் காணப்படும் கடவுள் பற்றிய ஆழமான நம்பிக்கைகள் சமயங்களின் நிலைத்த தன்மைக்கு காரணமாகக் காணப்படுகின்றது.(பக்தவசல பாரதி,2003).

இன்றைய உலகமானது உலக கிராமமாக இன,மொழி, மத வேறுபாடுகளை கடந்து இணைந்ததாக உள்ளது. அந்தவகையில் உலகில் இந்து,கிறிஸ்தவம், இஸ்லாம், யூதம், கொன்பியூசம் போன்ற பல்வேறு சமயப் பிரிவுகளும் ஆயிரக்கணக்காண வேறுப்பட்ட சடங்கு முறைகளும் நம்பிக்கைகளும் உலகில் காணப்படுகின்றன. அந்தவகைளில் இலங்கையும் ஆசியக் கண்டத்தில் பல்லின பல்மதப்பிரிவுகளை கொண்ட நாடாகக் காணப்படுகின்றது. இவ்வாறு வேறுப்பட்ட சமய நம்பிக்கைகள் காணப்படினும் அவை சமூகத்தின் உறுதிப்பாட்டை பாதுகாக்கும் சமூக இயங்குத்தன்மையை ஏற்படுத்தி ஒழுக்கத்துடன் சமூகத்தை வழிநடாத்தும் கருவி என்கின்ற பொதுவான நோக்கத்தை கொண்டவையாக காணப்படுகின்றது. சடங்களும் வழிபாடும் சமூகத்தில் நெருக்கடி நிலையை நீக்கி கூட்டு மன உணர்வை ஏற்படுத்துவதாகும். (Durkheim,1961)

சடங்குகள் சமயத்தின் கருப்பொருளாக கருதப்படும் புனிதத் தன்மையின் பால் மக்கள் மேற்க்கொள்ளும் நடத்தை கோலங்களின் தொகுப்பாகும் (Rossano,2012.) அந்தவகையில் இலங்கையின் மலையகக் பெருந்தோட்ட பகுதிகளில் காணப்படும் ஒரு வேறுப்பட்ட வழிபாட்டு முறையாகவும் சடங்குமுறையாகவும் கிறிஸ்தவ முதல் புனிதரான வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றது.

கிறிஸ்தவ முதல் புனிதரான புனித வனத்து சின்னப்பரை இன, மொழி, மத வேறுபாடுகளை கடந்து கிறிஸ்தவம்,இந்து,பௌத்த, இஸ்லாம் என அனைத்து மக்களின் பங்களிப்புடன் ஆய்வு பிரதேசமான ஸ்டயர் தேயிலை தோட்ட மக்கள் சமூக ஒற்றுமையுடன் இம்மக்களின் பண்பாடுகளுக்கு ஏற்ற வகையில் கிறிஸ்தவ மத புனிதரை இந்து நாட்டார் வழிபாட்டு முறைகளை ஒத்தத்தன்மையான ஒரு வழிபாட்டு முறையின் ஊடாக வழிபட்டு வருகின்றமை சமூகவியல் ரீதியிலும் சமய சடங்குகள் ரீதியிலும் பல

சமய வேறுபாடுகளையுடைய சமய மக்களின் ஒருவிதமான சமய அநுபவங்களை பெறுகின்றனர் என்ற வகையில் கவனம் செலுத்த வேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது.

ஆய்வானது பெரும்பாண்மை இந்துக்கள் வாழும் தேயிலை தோட்டத்தில் கிறிஸ்தவர்களின் புனித வனத்துசின்னப்பர் வழிபாட்டு முறை முரண்பாடுகளினை தவிர்த்து மாறாக இந்து மக்களையும் அதே போல ஏனைய மக்களையும் இணைத்து பயனிப்பதன் பின்புளத்தினை ஆராய்வதாகவும் ஆய்வு அமைகின்றது.

## 2.ஆய்வுப்பிரச்சினை

இன்றைய உலகச் சமூகமானது வேறுப்பட்ட இன,மத,மொழியை கொண்ட சமூகங்களாக காணப்படுகின்றது. சமூகத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக வேறுபட்ட சமயங்களும் நம்பிக்கைகளும் காணப்படுகின்றது. வரலாற்று காலம் தொடக்கம் இன்று வரை சமயங்களின் பெயர்களினால் போர்களும், கலவரங்களும் நிகழ்ந்துள்ளது. சிலுவை போரில் தொடங்கி இன்று சமயங்களின் தீவிரமான நம்பிக்கைகள் சமூகத்தில் தீவிரவாதத்துக்கும் காரணமாக அமைவதுடன் சமூக அமைதியை பாதிக்கும் விடயமாக காணப்படுகின்றது.

பல்லின, பல்மத நாடான இலங்கையின் அமைதியையும் அபிவிருத்தியையும் பாதிக்கும் விடயமாக சமய முரண்பாடுகள் அமைகின்றன. அன்பையும் ஒழுக்கத்தையும் போதிக்கும் சமயங்களின் பெயரால் மக்களிடையே சமூக அமைதியை பாதிக்கும் மத முரண்பாடுகள் சமூகத்தில் பௌதீக ரீதியான, வளங்களின் பாதிப்பு,நாட்டின் பொருளாதார பாதிப்பினை ஏற்படுத்துவதுடன் மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்படுவதுடன் பல்வேறு சமூக உளப்பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. ஆக இன்றைய சூழலில் சமயத்தின் நேர் தொழிற்பாடுகளை கடந்து மறை தொழிற்பாடுகள் நிகழ்வதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் 2019 ஆண்டு சித்திரை மாதம் 21 திகதி இடம் பெற்ற ஈஸ்டர் தாக்கலின் பின் இலங்கையில் மத குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற வன்முறைகள், அதிகார மேலாண்மைகளை குறிப்பிடலாம் உதாரணமாக நீர் கொழும்பு கலவரம்(முஸ்லிம்-சிங்கள கலவரம்.), முல்லைத்தீவு நீராவிப்பிள்ளையார் விவகாரம் மற்றும் கன்னியா விவகாரம் ஆகிய விடயங்களில் ஏற்பட்ட இந்து பௌத்த முரண்பாடு என மத முரண்பாடுகள் இந்து , கிறிஸ்தவ ,பௌத்த, இஸ்லாம் ஆகிய மத பிரிவுகள் இடையில் இலங்கையில் இடம்பெற்று வருகின்றமையினை அவதானிக்கமுடிகின்றது.

இந்நிலையில் மலையகப்பகுதிகளில் காணப்படும் கிறிஸ்தவ புனிதரான வனத்துசின்னப்பர் வழிபாடுகள் கிறிஸ்தவ மக்களை கடந்து இந்து, பௌத்த, இஸ்லாம் என மக்களை இணைப்பதுடன் வலுவான ஆரோக்கியமான சமயங்களுக்கு இடையிலான உரையாடலை எடுத்துக்காட்டுகின்றது. தோட்ட தொழிலாளிகளான இம்மக்கள் மத வேறுபாடுகளை கடந்து தங்களுக்கான ஒரு வழிபாட்டு முறையின் ஊடாக சமூக இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதாக வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் நிகழ்த்துவதன் ஊடாக சமூக கூட்டுணர்வினை மேம்படுத்துகின்றார். பன்மைத்துவ சமூகம் ஒன்றில் மத வேறுபாடுகளை கடந்து பொதுவான வழிபாட்டு முறை ஒன்றின் மூலமாக சமூகத்தில் ஒறுமைப்பாட்டினை ஏற்படுத்தும் விடயமாக மலையக பகுதிகளில் காணப்படும் புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறை காணப்படுவது ஆராயப்பட வேண்டிய விடயமாக காணப்படுகின்றது.

**3.ஆய்வு நோக்கம்**

**3.1.பிரதான நோக்கம்**

- புனித வனத்துசின்னப்பர் வழிபாட்டு முறை சமூக இணக்கப்பாட்டுக்கு இடையிலான தொடர்பினை இனங்காணல்.

**3.2.சிறப்பு நோக்கங்கள்**

- புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டில் இந்து நாட்டார் வழிபாட்டு பண்புகளின் தாக்கதினை அறிதல்.
- புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறையின் தனித்துவமான அம்சங்களை இனங்காணல்.
- புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறையில் அனைத்து மக்களும் கவரப்படும் விதத்தினை இனங்காணல்.

**4.ஆய்வு வினாக்கள்.**

- புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறை சமூக இணக்கப்பாட்டுக்கு வழங்கும் பங்களிப்பு எத்தகையது?
- புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறைக்கும் இந்து நாட்டாரியலுக்குமான தொடர்பு யாது?
- புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறைக்கும் சமூக உறுதிப்பாட்டுக்குமான தொடர்பு யாது?

**4.ஆய்வின் முக்கியத்துவமும் தர்க்க ரீதியான நியாயப்பாடும்**

கிறிஸ்தவ மதத்தின் முதல் புனிதர் என சிறப்பிக்கப்படும் புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறையும் சமூக இணக்கப்பாடும் என்னும் ஆய்வு சமயங்களுக்கிடையில் சமூகத்தில் ஏற்படும் முரண்பாடான சூழலில் சமயத்தின் பால் சமூகத்தில் ஏற்படும் சமூக இணக்கப்பாடு தொடர்பான பார்வையாக அமைகின்றது.

சமூகத்தின் ஒழுங்கு,இயக்கம் ஆகிய விடயங்களை பேணும் ஒரு சமூக நிறுவனமான சமயத்துக்கும் சமூக அமைதிக்கும் நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. ஆனால் இன்றைய சூழலில் பண்பாட்டு புரிந்துணர்வு இன்மை,சகிப்பு தன்மையின்மை,ஆகிய விடயங்களினாலும் மற்றும் மதவாத தீவிரவாத சிந்தனையினாலும் சமூகத்தில் சமயங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றது.

புனித வனத்து சின்னப்பர் வழிபாடு கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் என்ற எல்லையை கடந்து ஏனைய சமயத்தவர்களினாலும் பங்கு பெறும் வழிபாட்டு முறையாக காணப்படுகின்றது. ஆக இவ்வழிபாடானது சமூக இணக்கபாடுகளை மேம்படுத்தி பொது சமயம் என்ற ஒரு சமயத்தின் நிலையை ஒத்துள்ளது. ஆக சமூகவியல் ரீதியில் நிலைத்த அபிவிருத்திக்கு சமூக இணக்கபாட்டு சிந்தனை அவசியமாகும் நிலையில் இவ்வழிபாட்டுக்கும் சமூக இணக்கபாட்டுக்கும் இடையிலான தொடர்பு நிலை ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் 30 வருட இனங்களுக்கு இடையிலான உள்நாட்டு யுத்தம் 2009 முடிவடைந்து நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கு பதிலாக இன முரண்பாடு மத ரீதியான முரண்பாடாக 2009 பிறகு பரிமாணம் அடைவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் நாட்டில் மத முரண்பாடுகள் இந்து , பௌத்த , கிறிஸ்தவ, இஸ்லாம் ஆகிய நான்கு மத பிரிவுகளுக்கும் இடையில் தொடர்பு பட்டு சிக்கல் தன்மையுடையதாக காணப்படுகின்றது. மதக்குழுக்களுக்கு இடையிலான முரண்பாடுகள் சிக்கல் தன்மையுடைய சமூகப்பிரச்சினையாக காணப்படுகின்றது. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் பன்மைத்து சமயப்பின்னணி உடைய சமூகத்தில் காணப்படும் வனத்து சின்னப்பர் வாழிபாட்டு முறை சமூக இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் விதத்தை வெளிப்படுத்தும் இவ் ஆய்வானது முக்கியத்துவமுடையதாக காணப்படுகின்றது.

## 5.ஆய்வு முறையியல்

### 5.1ஆய்வு வடிவம்

புனித வனத்து சின்னப்பரின் வழிபாட்டு முறையும் சமூக இணக்கப்பாடும் எனும் ஆய்வு மிக ஆழமாக மக்களின் பக்தி உணர்வினை ஆராய்வதாக காணப்படுவதனால் ஆய்வானது பண்புசார் ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது.

### 5.2..தரவு சேகரிப்பு நுட்பம்

ஆய்வுக்கான முதலாம் நிலைத் தரவுகள் பண்புசார் ஆய்வுக்கருவிகளான ஆழமான நேர்காணல், விடய ஆய்வு மற்றும் பங்குபற்றும் அவதானம் ஊடாகவும் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் கிறிஸ்தவ மத நூல்கள், சஞ்சிகைகள்,ஆய்வறிக்கைகள், இணையத்தளம் ஊடாகவும் திரட்டப்பட்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது.

### 5.3.தரவுப் பகுப்பாய்வு

பண்புசார் ஆய்வு கருவியின் ஊடாக பெறப்பட்ட தரவுகளை கருப்பொருள் பகுப்பாய்வு ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டன.

### 5.4.ஆய்வு பிரதேசம்

ஆய்வானது இலங்கையில் மத்திய மாகாணத்தில் உள்ள நுவரெலியா மாவட்டத்தில் கிளைன்லைன் தேயிலைத் தோட்டத்தை அடிப்படையாக கொண்டு கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஸ்டயர் தேயிலை தோட்டத்தில் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் என பல்மத மக்கள் வாழ்கின்றனர்.. இவர்களின் முக்கியமான வாழ்வாதார தேயிலை தோட்ட தொழிலில் காணப்படுகின்றனர்.

### 5..5.தரவுகளை உறுதி செய்தல்

ஆய்வு பிரதேசத்தில் பெற்ற தரவுகளை உறுதி செய்யும் முகமாக ஆய்வு பிரதேசத்தினை சூழவுள்ள மஸ்கெலியா, கிளைஸ்டல் , டொரிங்டன் போன்ற தேயிலை தோட்டங்களிலும் இவ்வழிபாட்டு முறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி தரவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளமை முக்கியமான விடயமாக ஆய்வின் நம்பகத்தன்மை மற்றும் பெறுமதியினை வெளிப்படுத்துவதாக காணப்பகின்றது.

## 6.இலக்கிய மீளாய்வு

Prakash,B.,Das,A.,and Amrutha,P.(2019).Religion and mental health . என்ற ஆய்வானது சமயம் எவ்வாறு உள ஆரோக்கியத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனை ஆய்வானது இந்து சமயத்தினை அடிப்படையாக கொண்டு வெளிப்படுத்துகின்றது.சமயமானது சமூகத்தில் அன்பு ,கருணை,சமாதானத்தினை சமூகத்தில் ஏற்படுத்துவதுடன் சமூகத்தின் சீரான செயற்பாட்டுக்கு பங்களிக்கும் ஒரு சமூக நிறுவனம் என ஆய்வானது குறிப்பிடுகின்றது.அந்தவகையில் வனத்துசின்னப்பர் வழிபாடு தொடர்பான ஆய்வுக்கான வழிகாட்டியாக இவ்ஆய்வு அமைகின்றது.

Gunatilleke,G.(2015).The chronic and the Acute: Post- War Religion Violence in Sri Lanka. 2009 ஆணடு வரை இலங்கையில் இடம்பெற்ற 30 வருட உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த நிலையில் இலங்கையில் இடம்பெறும் மதக்கலவரங்கள் தொடர்பில் ஆய்வானது வெளிப்படுத்துகின்றது. ஆய்வில் இலங்கையில் இடம்பெறும் மதக்கலவரத்தினை 5 வகையாக ஆய்வாளர் பார்கின்றார் அந்தவகையில் உடல் தாக்குதல்,சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தல், கட்டுபாடுகள், போட்டித்தன்மை ,

பாரபட்சம் போன்ற விடயங்கள் போன்ற விடயங்களினை தெரிவிக்கின்றார். சமூக இணக்கப்பாடு தொடர்பான ஆய்வான வனத்துசின்னப்பர் வழிபாட்டுமுறை எனும் ஆய்வுக்கான வழிகாட்டியாக அமைகின்றது.

Awan ,A.(2011). The Impact of worship on intvitual's well- being. ஆய்வானது வழிபாடு என்பது கடவுளுடனான தொடர்பாடல் முறை என குறிப்பிடுகின்றது. வழிபாட்டு முறைகள் எவ்வாறு தனியனின் உள நலத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை ஆய்வானது வெளிப்படுத்துகின்றது மற்றும் உள நலம் என்பது எவ்வாறு சமயத்தின் பொருளாதாரம் எனும் விடயத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை ஆய்வானது விமர்சன ரீதியாக ஆராய்கின்றது. ஆய்வுக்கான நேரடியான இலக்கிய ஆக்கங்கள் கிடைக்காமையினால் வழிபாட்டு முறைகளின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தும் ஆய்வுகள் இலக்கிய மீழாய்வுகளாக எடுத்து கொள்ளப்பட்டது.

## 7.கோட்பாட்டு பிரயோகம்

### 7.1. தொழிற்பாட்டுவாதம்

நவீன சமூகவியலாளர்கள் விஞ்ஞான ரீதியாக சமூகப்பொருண்மைகளான நம்பிக்கை, செயன்முறைகளை கற்றுள்ளனர். அந்தவகையில் சமூகவியலாளர்களான William Robertson Simith, Emile Durkehim, A,R. Redcliff Brown, B.Malino Weskhi, Max Weber, Talcot Parson அவர்களை பின்தொடர்ந்து சமூகவியலாளர்களினால் தொழிற்பாட்டுவாதம் கட்டமைக்கப்பட்டது.

சமயம் என்பது உலகளாவிய தன்மையுடையதாக எல்லா சமூகங்களிலும் சமூக முறைமையை பாதுகாப்பதாக காணப்படுகின்றது. சமூகத்தின தேவையான கருத்தியலின் அவசியம், உணர்வுசார் ஒழுங்கமைவு சமூக உறுதிப்பாடு ஆகிய விடயங்களினை ஏற்படுத்துவதாக சமயம் காணப்படுகின்றது. சமயமானது மக்களை ஒன்றுபட வைத்து கூட்டு மனதை உருவாக்கி சமூக உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதுடன் சமூக ஒழுங்கு மற்றம் இயக்கத்துக்கு காரணமான சமூக நிறுவனமாக சமயம் காணப்படுகின்றது.

வழிபாட்டு முறைகள் சமூகத்தில் மக்களிடையே பிணையை ஏற்படுத்துகின்றது. அந்தவகையில் புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டு முறைகள் மத வேறுபாடுகளை கடந்து சமூத்தில் மக்களை இணைப்பதுடன் இதன் வழியாக அவர்களின் சமூக உறுதிப்பாட்டினை ஏற்படுத்தி இறை அனுபவத்தினை தருவதாக காணப்படுகின்றது. மேலும் இது சமூக அமைதியை மேம்படுத்துவதுடன் மக்களின் துன்பங்களுக்கான ஆறுதலாக அமைகின்றதுடன் சமயங்கள் சமூகத்தின் சீரான இயக்கத்தில் முக்கியமான பங்கினை வகிக்கின்றது.

## 8.ஆய்வுக்கலந்துரையாடல்

பிராந்திய அறிவியல் உள்ளிட்ட பல சமூக அறிவியல் கோட்பாட்டு பின்னணியில் நோக்கும் போது சமயம் என்பது மனித உளவியலின் கூட்டு விருத்தியாகும். (Sigmund freud,1957).மனிதன் சமூக விலங்காக காணப்படும் ( Aristotle, ).அதேநேரம் சமயம் ஆன்மீகத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டும் காணப்படுகின்றான். சமயம் சமூகம் இரண்டும் இடைத்தொடர்புடைய வகையில் இணைந்துள்ளது. சமயம் என்பது உலகளாவிய தன்மையுடன் செல்வாக்கு மிக்க ஒரு சமூக நிறுவனமாகக் காணப்படுகின்றது

வழிபாடு என்றாலே வரையறுக்கப்பட்ட சடங்கு என்பது கூறலாம். சடங்குகள் அனைத்து சமயங்களிலும் வேறுப்பட்ட வகையில் காணப்படினும் அவை சமூகத்தில் கூட்டுணர்வை ஏற்படுத்தி சமூகத்தை வழிப்படுத்தும் விடயமாக காணப்படுகின்றது.( .(பக்தவசல பாரதி,2003).

**புனித வனத்து சின்னப்பர் வரலாறு**

ஏகிப்து நாட்டை பிறப்பிடமாக கொண்ட வனத்து சின்னப்பர் கி பி 250 ஆண்டு டேசியுன் என்ற அரசனானவன் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கர வேத கலாபனை, திருச்சபையின் அமைதியை குழப்பியது. இந்த ஆபத்தான வேளையில் புனித வனத்து சின்னப்பர் பாதுகாப்புக்காக பாலைவனத்துக்கு சென்று 22 வயதில் இருந்து தனது இறுதி காலப்பகுதி வரை மலைக்குகையில் உலக வாழ்க்கையுடன் தொடர்பு கொள்ளாமல் தனிமையாக இயற்கையுடன் ஒன்றிய ஒரு வாழ்வு முறையில் இறைவன் அருளால் தன் இறக்கும் வரை காகம் ஒன்று இவருக்கு தினமும் உணவு கொண்டு வந்து தந்ததாகவும் இவரது வரலாறு அமைகின்றது.

**ஆலய அமைப்பு**

உலக வாழ்வை துறந்து இயற்கையுடன் தஞ்சம் புகுந்ததால் புனித வனத்து சின்னப்பருக்கான கோவில்களை இம்மக்கள் தேயிலை தோட்டங்களில் காடுகளை அண்மித்து மிக எளிமையாக ஆடம்பரம் இன்றி ஒரு வெள்ளை சிலுவை அடையாளத்தை உடைய ஒரு சிறிய பீடத்தில் வைத்து அவரது ஆலயமாக அடையாளப்படுத்துகின்றனர். அண்மைக்காலத்தில் இவ்வாலயங்கள் சீமெந்தினால் கட்டப்பட்ட சிறிய கட்டிட ஆலயங்களாக வளர்ச்சியடைகின்றன.

**வழிபாட்டு முறைகள்**

புனித வனத்து சின்னப்பருக்கான வழிபாட்டு தினமாக ஜனவரி 15 திகதியை திருச்சபை குறிப்பிட்டுள்ள போதிலும் மலையகப்பகுதிகளில் உள்ள தேயிலைத்தோட்ட மக்களில் பெரும்பான்மையானவர்கள் தொழிலாளர் தினமான மே 01 திகதி தங்களது தொழில் செய்யும் தேயிலை மலை காடுகளில் தங்களுக்கான பாதுகாப்பினை வேண்டி இப்புனிதரை இன, மத வேறுபாடுகள் இன்றி வழிபடுகின்றனர்.

இந்துக்களிடையே காணப்படும் நாட்டார் வழிபாட்டு முறைகளை ஒத்தவகையிலான முறையின் ஊடாக மலையக கத்தோலிக்கர்கள் புனித வனத்து சின்னப்பரின் வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. பன்மைத்துவ மத பின்னணியை உடைய ஆய்வு பிரதேச மக்கள் ஒருமித்த தன்மையுடன் விசேட திருவிழா நாளான மே 01 திகதி திருச்சபையினரால் குறிப்பிட்ட 15 திகதி அல்லது ஒரு சில பிரதேசங்களில் அவர்கள் தெரிவு செய்யும் நாளில் தொழில் செழிப்பு, பாதுகாப்பு, நோய் நீங்கல் முக்கியமாக உடலில் உள்ள பருக்கள் நீங்குதல் போன்ற வேண்டுதல்களை முன்வைத்து ஊர் மக்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து வழிபாட்டு படையல்களுக்கு தேவையான உணவு பொருட்கள், ஏனைய விடயங்களை ஒழுங்கமைக்கின்றனர்.

இந்து நாட்டார் தெய்வ வழிபாடுகள் போல புனித வனத்து சின்னப்பரிடம் நேர்த்தி கடன் வைத்து தனது வேண்டுதல்கள் வெற்றியடைந்தால் உயிர் கோழியை பூசை வழிபாடுகளுக்கான உணவு சமைக்க வழங்குவதுடன் மேலும் மக்கள் அரிசி, மரக்கறி வகைகள்,பாண்,ஜேம்,பேரீச்சம்பழம் போன்ற படையலுக்கான உணவு பொருட்களை வழங்குவதன் வழியாக வழிபாடுகளுக்கான உதவிகளை அனைத்து மதத்தவர்களும் வழங்குகின்றனர். பின் கோழி உள்ளிட்ட இவ்வுணவு பண்டங்கள் புனித வனத்து சின்னப்பருக்கு பிரசாதமாக படைப்பார்கள். இவ்விடயம் இந்து நாட்டார் வழிபாட்டினை ஒத்த வகையில் எகிப்திய கிறிஸ்தவ புனிதரை இம்மக்கள் தங்கள் பாரம்பரிய பண்புகளுக்க ஏற்ப வழிபடுகின்றனர். இவ்வழிபாடு நிலைத்து நிற்பதற்கும் ஏனைய மதத்தவர்கள் முக்கியமாக இந்துக்கள் பங்குபற்றுவதற்கும் இவ்வழிபாட்டு முறைகள் அமைப்பு காரணமாக அமைந்துள்ளதுடன் மக்களை மத வேறுபாடுகளை கடந்து பொதுவான ஓர் இடத்தில் கூட்டுணர்வை ஏற்படுத்தி சமூக உறுதிபாட்டை வலுப்படுத்துவதுடன் இறை அநுபவத்தை வழங்கும் நிகழ்வாக உள்ளது.

பச்சை இலைகளை கொண்டு பந்தல் நட்டு, மலர்கள் வைத்து, படையல் ஈட்டு பிரசாதத்தை எல்லோரும் ஆலய வளாகத்தில் பகிர்ந்து உண்ணுகின்றனர். மேலும் பூசை வழிபாடுகள் திருச்சபை தேவாலய மதகுருக்களால் இன்றி சாதாரண மக்களினால் வனத்து சின்னப்பருக்கான பாமாலைகள் பாடப்பட்டு இடம்பெறுகின்றது. இவ்வழிபாட்டு முறைகள் இந்து நாட்டாரியல் வழிபாடுகளை ஒத்த வகையில் கிறிஸ்தவ புனிதரான புனித வனத்து சின்னப்பரை தோட்ட தொழிலாளர்களான பாமர மக்கள் தங்களுக்கு ஏற்றாற் போல இவ்வழிபாட்டினை ஒழுங்கமைத்து மக்கள் வழிபாடாக இதனை தொடர்ச்சியாக மேற்கொள்கின்றனர்.

ஆய்வுப்பிரதேச மக்கள் புனித வனத்து சின்னப்பர் மீது ஆழமான நம்பிக்கை கொண்டவர்களாக உணவுப்பூர்வமான பங்கேற்புடன் வழிபாடுகளை நிகழ்த்துவதுடன் மத வேறுபாடுகள் இன்றி எல்லோரின் கருத்துக்களும் வழிபடும் இடத்தில் கேட்கப்படும் மக்களாட்சி பண்புடன் கூடிய ஒரு வழிபாடாக இவ்வழிபாடு அமைகின்றது.

ஆய்வு பிரதேச மக்களான தோட்ட தொழிலாளிகளின் தொழில் செழிப்பு, பாதுகாப்பு, நோய்கள் நீக்கல் போன்ற நெருக்கடியற்ற நிலையை அடைய ஒன்றாக கூடி வழிபாட்டினை நிகழ்த்தும் போது மானுடவியலாளரான லெவிஸ்ட்ராஸ் குறிப்பிடுவது சமூகத்தின் உட்கட்டுமானம் வலுவாக புதுப்பிக்கப்படுகின்றுது.

நெருக்கடி நிலை ⟶ ஒன்றான பிரார்த்தனை ⟶ வலுவான உட்கட்டுமானம்

நோய்கள், தொழில்செழிப்பின்மை,தேயிலை தோட்டத்தொழில் பாதுகாப்பின்மை போன்ற நெருக்கடியான நிலைகளின் போது மக்கள் சமய வேறுபாடுகளை கடந்து பொதுவான சமயம் என்ற நிலையில் ஒன்றினைந்து பிராத்தனைகளில் ஈடுபட்டு வலுவான உட்கட்டுமானமான சமூக இணக்கப்பாடு மற்றும் சமூக உறுதிப்பாடு ஆகிய விடயங்களை பெறுகின்றனர்.

புனித வனத்து சின்னப்பர் வழிபாட்டினையும் மலையக கத்தோலிக்கர்களுக்கு இடையிலான தொடர்பினை நாம் முன்னோர் வழிபாடு என்ற வகைப்பாட்டின் கீழ் நோக்க முடியும். இறந்தோரின் ஆற்றல் வாழ்வில் நலனில் பெரும்பங்கு வகிக்கின்றது என்னும் கருத்தாக்கம் ஏற்பட்டதே முன்னோர் வழிபாடாகும்.

கிறிஸ்தவ கத்தோலிக்கர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தால் சமூக சேவைகள் அற்புதங்களை புரிந்து வாழ்ந்து இறைவனடி எய்திய புனிதர்களை வழிபடும் வழக்கங்களை கொண்டுள்ளனர். இறந்த புனிதர்களின் ஆற்றலும் அநுபவமும் வாழ்வோரை செம்மைப்படுத்தும் என்ற நம்பிக்கை, இறந்த புனிதர்களின் ஆசி என்றென்றும் வாழ்வோருக்கு கிடைக்க வேண்டும் என்று கிறிஸ்தவ கத்தோலிக்கர்கள் வழிபடுகின்றனர். இதில் இலங்கையை பொருத்தவரை புனித வனத்து சின்னப்பர் ஆலயம், விசேடமாக புனித அந்தோனியார் ஆலயங்களில் மத வேறுபாடுகளை கடந்து மக்கள் வழிபடுவதனை அவதானிக்க முடிகிறது.

கொழும்பு கொச்சிக்கடையில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயம் சர்வமத மக்கள் செல்லும் ஓர் ஆலயமாக காணப்படுவதுடன் அங்கும் காணிக்கை கட்டுதல், நேர்த்தி வைத்தல், மாலை வைத்தல் போன்ற இந்து சமய வழிபாட்டு முறைகளின் தாக்கம் காணப்படுகின்றது. பல்மத மக்கள் வாழும் சமூகமாக ஆய்வு பிரதேசத்தில் சர்வமத அனுசரனையுடன் இடம்பெறும் இவ்வழிபாட்டு முறையானது சமூகத்தில் சமயங்களுக்கு இடையிலான இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. தோட்ட தொழிலாளிகள் தங்கள் பிரச்சினைகள் மற்றும் தொழில் விருத்திக்காக ஒன்றிணைந்து சமூக உறுதிபாட்டினையும் சமூக பிணைப்பையும் ஏற்படுத்தும் வகையில் இவ்வழிபாடு காணப்படுகின்றது.

அந்தவகையில் மக்கள் இவ்வழிபாட்டின் ஊடாக வேறுப்பட்ட சமயம் என்கின்ற நிலையை கடந்து வேறுபட்ட சமய அநுபவத்தை பெறுகின்றனர். மனிதர்கள் அனைவரும் சமம் என்னும் கருத்தை அனைத்து சமயங்களும் வலியுறுத்துகின்றன. அத்தோடு அன்பு, கருணை, சகோதரத்துவம் போன்ற பண்புகளை வலியுறுத்தும் வகையில் இவ்வழிபாடு அமைவதால் இவ்வழிபாடு தனிமனிதர்களை ஒன்றிணைக்கின்றன. சமூதாய அமைப்பில் முன் பின் தெரியாதவர்களாக இருந்தும் அவர்களிடையே பிணைப்பை ஏற்படுத்துகின்றன. இம்மக்களை இவ்வாறு பிணைக்கும் ஆற்றல் மற்ற சமூக நிறுவனங்களை காட்டிலும் சமயத்திற்கே அதிகம் உள்ளது.

இவ்வழிபாட்டு முறைகள் மக்களின் நேர்காணலின் அடிப்படையில் அவர்களின் வாழ்வியலில் எதிர்கொள்ளும் உடலியல்,உளவியல், வாழ்வியல் சிக்கல்களை மாற்றங்களை தாங்கிக்கொள்ளும் திறனை சமயம் கொடுக்கின்றது என தெரிவிக்கின்றனர்.

பல்மத மக்கள் வாழும் ஆய்வு பிரதேச மக்களிடமே சமாதானமான மனங்கள் ஏற்படுவதற்கு இவ்வழிபாடு துணை செய்கின்றது. சமாதானமான சமூகத்தில் தான் நிலைத்த சமூக அபிவிருத்தி என்பது சாத்தியமாகும். ஆக நிலைத்த அபிவிருத்திக்கான பாதையாக சமய சமாதானத்தை காணலாம்.

சமூக இயங்குத்தன்மையான இச்சடங்கு முறைகள் மாறும் தன்மையை அவதானிக்க முடிகிறது. மக்களிடம் இவ்வழிபாட்டு முறை புரிந்துணர்வையும் ஒற்றுமையையுடன் கூடிய சமூகத்தை உருவாக்கும் வகையில் இவ்வழிபாடு அமைகின்றது. மக்கள் தொழிலாளர்கள் வர்க்கமாக பேதம் பாராமல் தங்களின் நலனுக்காக துன்பங்களுக்கு முடிவாக இவ்வழிபாட்டினை மேற்கொள்கின்றனர்.

## 9.முடிவுரை

சமயங்கள் சமூகத்தில் தவிரக்கப்பட முடியாத சமூக நிறுவனமாக காணப்படுகின்றது. அந்தவகையில் சடங்குகள் வழிபாட்டு முறைகளின் ஊடாக சமயங்கள் சமயத்தின் ஒழுங்கினை பாதுகாத்து சமூக உறுதிப்பாட்டினை ஏற்படுத்துகின்றது. அந்தவகையில் புனித வனத்து சின்னப்பர் வழிபாடு மலையக பகுதிகளில் கத்தோலிக்கர்களுடன் இணைந்து இந்து , பௌத்த கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் ஆகிய சமயப்பிரிவினர்கள் தொழிலாளர் வர்கமாக இனைந்து பொதுவான சமயம் போன்ற ஒரு ஒழுங்கமைப்பில் இணைந்து வழிபாடுகளில் ஈடுபடுகின்றமை என்பது நல்ல சமூக இணக்கப்பாட்டுக்கான அடையாளமாக காணப்படுகின்றது. பன்மைத்துவ சமயப்பின்புலத்தினை உடைய நாட்டில் சமயத்தின் ஊடான சமூக நல்லிணக்கம் என்பது நாட்டின் அபிவிருத்திக்கு ஆதாரமாக அமையும். சமூக நீதிக்காக மக்கள் அனைவரும் இன மத பேதமின்றி ஒரே சமூகமாக ஒன்றினைய வேண்டும். அன்பினை போதிக்கும் சமயங்களின் பெயரால் சமூகத்தில் வன்முறைகள் ஏற்படுமாயின் சமூகம் நோய்நிலமையடையும் அபாயம் ஏற்படும். ஆக சமயத்தினை அடிப்படையாக கொண்டு சமூக இணக்கப்பாடு ஏற்படுவது என்பது அபிவிருத்திக்கான அவசியமாகும்.

**உசாத்துணைகள்.**


- சன்முகலிங்கன்,ந.,பாரதி,ப.(2014). இலங்கை இந்திய மானிடவியல். நியு செஞ்சுரி புக் அவுஸ்(பி) லிட்,சென்னை.
- பாரதி,ப.(2003).பண்பாட்டு மானிடவியல்.மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
- Durkheim, (1961).The Alemenetary forms of religious life.collier books, newyork.
- Gunatillake, G.The chronic and the Acute: Post- War Religious Violence in Sri Lanka. International centere for Ethic studies, Colombo.
- Claveyrolas,M.,Ponceaud,A.G.,Madavan,D.,Meyer,E.,and Trouillet,P.(2018).Hindus and others: A Sri Lankan perspective. The south Asianist,6(1),1-22.
- Aliff, S.M. (2015). Post –War Conflict in Sri Lanka Violance against Sri Lankan Muslims and Buddhist Hegemony. Internataional Letter of social and Humanistic Sciences, 59.109-125.
- Crim, J. (2006). Internatonal Religion indexes: Government Regulaton Government Favoritism, and Social Regulation of Religion. Interdisciplinary Journal of Research on Religion, 2, 1-40.
- Awan, A. (2011).The Impact of Worship on indvidual's Well-Being. Journal of Advanced Research in Low and Economics, 5, 20-30.